Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 245/2023** |
| Deposition of witness for | :: | **PW. 6** |
| Name | :: | **நாகராஜபிரபு (சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 3 எதிரிகள் ஆஜர். 2, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**03.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.07.2023 ம் தேதி நான் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த நபர் மதுரைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்திருப்பதாக தகவலை பெற்று மதுரை கிரேஸ் கென்னட் மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அருப்புக்கோட்டை ராஜீவ் நகரை சேரந்த அழகர்சாமி என்பவரிடம் புகார் மனு பெற்று அன்றைய தினம் 19.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 182/2023 சட்டப்பிரிவு 506(1) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகாரை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மற்றும் நகல்களை உயர்

அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

2. பின்னர் அன்றே 19.45 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் காந்தி, கந்தசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் நான் தயார் செய்ததுதான். **(பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 மற்றும் மாதிரி வரைபடம் ஆ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் சாட்சிகளான அனுசுயா, அழகர்சாமி, கீதாபிரியா, பாலசுப்பிரமணியன், சக்திவேல் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் எனது விசாரணையின் அடிப்படையில் ஏற்கனவே இருந்த சட்டப்பிரிவான 506(1) இதசவிலிருந்து 294(ஆ), 506(1) இதசவாக பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. பின்னர் 21.07.2023ம் தேதி எதிரிகளுக்கு குவிமுச பிரிவு 41A வின் கீழ் காவல் நிலையத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பி வைத்தேன். 24.07.2023ம் தேதி எதிரிகள் நிலையத்தில் ஆஜரானவர்களை காவல் நிலையத்தில் உள்ள ஒப்புகை பதிவேட்டில் கையொப்பம் வாங்கிவிட்டு விசாரணை செய்து அவர்களை அனுப்பி வைத்தேன்.

6. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கில் எனது புலன் விசாரணை முடித்து 1 முதல் 4 எதிரிகள் மீது 294(ஆ), 506(1) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கில் நான் தான் விசாரணை அதிகாரி என்றாலும் நான் தான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன் என்றாலும் சரிதான். இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் எதிரிகள் வீடு அடுத்தடுத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். எதிரிகளின் வீட்டை தாண்டி தான் புகார்தாரரின் வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் வண்டி பாதை

அவ்வாறு தான் அமைந்துள்ளது. எதிரிகள் தோண்டிய உறைகுழியானது அவர்கள் வீட்டின் அஸ்திவாரத்தை ஒட்டி தோண்டப்பட்டது என்றால் அஸ்திவாரத்தை ஒட்டி தான் தோண்டினார்கள், ஆனால் அந்த இடமானது பஞ்சாயத்து சாலையில் உள்ளது.

2. புகார்தாரரும் அவரது வீட்டிற்கு முன்பாக இதே போல் ஒரு குழி தோண்டியுள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் அவரது மனைவி எதிரிகள் ஏற்கனவே இரண்டு குழிகள் தோண்டிவிட்டு தற்போது 3 வதாக அவர்கள் வீட்டின் முன்பு உறைகுழி தோண்டுவது தான் பிரச்சனை என்று என்விசாரணையில் கூறினார்களா என்றால் முன்பு உறைகுழி இருந்ததாக என்னிடம் சொல்லவில்லை. வீட்டின் முன்பு உறைகுழி பற்றி தான் என்னிடம் கூறினார்கள், அதுதான் பிரச்சனை.

3. எதிரிகள் உறைகுழி தோண்டினால் புகார்தாரருக்கு என்ன பிரச்சனை ஏற்படும் என்று எனது விசாரணையில் கூறினாரா என்றால் புகார்தாரரின் கார் அவ்வழியாக செல்வதற்கும், அவர் வீட்டின் முன்பு நிறுத்துவதற்கும் இடையூறாக இருக்கும் என்று என்னிடம் கூறினார். இவ்வழக்கு சம்பவம் குறித்து எத்தனை மணிக்கு எனக்கு தகவல் கிடைக்க பெற்றது என்றால் 10.07.2023 ம் தேதி காலை 10.30 மணியளவில் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்தது. நான் பணிபுரிந்த காவல் நிலையத்திற்கு எதிரே தான் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை அமைந்துள்ளது என்றால் சரிதான்.

4. நான் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று புகார் வாக்குமூலம் எதுவும் பெற்றேனா என்றால் நான் தகவல் கிடைத்தவுடனே அன்று காலை 10.40 மணியளவில் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அப்போது புகார்தாரரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பரிந்துரை செய்து கொண்டிருந்தார்கள், அதனால் புகார் வாக்குமூலம் பெறவில்லை. அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் புகார்தாரரின் விபத்து பதிவேட்டில் காயத்திற்கான காரணம் என்ன கூறப்பட்டிருந்தது என்று நான் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இவ்வழக்கிற்கு விபத்து பதிவேடானது தேவைப்படாத ஆவணம் என்று கருதி நான் அதை பொறுத்து விசாரணை செய்யவில்லை.

5. புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மற்றும் உதவியாளரை நான் இவ்வழக்கில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான், அவருக்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக தனியாக குற்ற எண். 183/2023 சட்டப்பிரிவுகள் 309 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி முதல் தகவல் அறிக்கையை நான் தான் பதிவு செய்தேன். அதனால் மருத்துவர்கள் யாரும் இவ்வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் மேற்படி குற்ற எண். 183/2023 சட்டப்பிரிவுகள் 309 இதசவின் கீழ் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். **( குற்ற எண். 183/2023 சட்டப்பிரிவுகள் 309 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் எசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. புகார் வாக்குமூலமானது எங்கு வைத்து பெறப்பட்டது என்றால் புகார் மனுவாக தான் பெற்றேன். புகார்தாரர் அழகர்சாமி மதுரை கிரேஸ் கென்னட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவரே கைப்பட எழுதி 10.07.2023ம் தேதி 15.00 மணியளவில் என்னிடம் கொடுத்தார். புகார் மனுவானது அழகர்சாமியால் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் நான் பிரிவு 161(3) வாக்குமூலம் எப்போது வாங்கினேன் என்றால் மதுரையில் உள்ள அதே மருத்துவமனையில் வைத்து 10.07.2023ம் தேதி 23.00 மணியளவில் வாங்கினேன். நான் சொல்வது போல் புகார்தாரரிடம் எந்த வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல.

7. அசாஆ.1 புகாரில் புகார்தாரரின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் இருப்பதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் மிரட்டியதாக குறிப்பு உள்ளது. யார் குறிப்பிட்டு புகார்தாரரை மிரட்டினார்கள் என்று புகாரில் இல்லை என்றால் ராஜாமணி, சரவணக்குமார், முத்துசரண்யா மிரட்டியதாகவும், பின்னர் குழிக்குள் இருந்து கருப்பையா மிரட்டியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. யார் என்ன வார்த்தையை பயன்படுத்தி மிரட்டினார்கள் என்று புகார் மற்றும் நான் புகார்தாரரிடம் பதிவு செய்த 161(3) குவிமுச வாக்குமூலத்தில் காண்பிக்கவில்லை என்றால் ராஜாமணி, சரவணக்குமார், முத்துசரண்யா ஆகியோர்கள் புகார்தாரரின்

வேலையை காலி செய்து விடுவதாக கூறி மிரட்டியதாக எனது விசாரணை மற்றும் புகாரில் கூறியுள்ளார்.

8. யார் என்ன கெட்ட வார்த்தையை பயன்படுத்தினார்கள் என்றும், அதனால் அவருக்கு என்ன மனஉளைச்சல் ஏற்பட்டது என்றும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மிரட்டியதால் தான் மனஉளைச்சல் இருந்ததாக கூறியுள்ளார். நான் விசாரணை செய்தபோது பதிவு செய்த 161(3) குவிமுச வாக்குமூலத்தில் குறிப்பிட்டு யார் என்ன வார்த்தையை பயன்படுத்தினார்கள் என்று என்னிடம் புகார்தாரர் சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன வார்த்தை என்று கூறியுள்ளார், ஆனால் யார் பேசினார்கள் என்று சொல்லவில்லை.

9. குற்றஎண். 183/2023 வழக்கு விசாரணையின்போது சம்பவ சமயத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு வீடியோ கைப்பற்றப்பட்டது என்றால் ஒரு வீடியோ பதிவு கைப்பற்றப்பட்டுள்ளதாக நான் தெரிந்து கொண்டேன். மேற்படி வீடியோ பதிவுகள் இவ்வழக்கு பிரச்சனையின்போது பதிவு செய்யப்பட்ட வீடியோ பதிவுகள் என்றால் சரிதான். உண்மையில் புகார்தாரர் கூறுவது போல் பிரச்சனை நடந்திருந்தால் மேற்படி வீடியோ பதிவுகளில் அது பதிவாகி இருக்கும் என்றாலும் அவ்வாறு எந்த பதிவும் வீடியோ பதிவில் காணப்படாத காரணத்தினால் தான் நான் மேற்படி வீடியோ பதிவுகளை இவ்வழக்கு கோப்பில் இணைக்கவில்லை என்றால் சரியல்ல, இவ்வழக்கு விசாரணைக்கு தேவைப்படாத காரணத்தினால் சேர்க்கவில்லை.

10. அசா.2 பாலசுப்பிரமணியன், ப.சா.4 சக்திவேல் ஆகியோர்கள் யார் அழைத்ததன்பேரில் சம்பவ இ டத்திற்கு வந்தார்கள் என்றால் புகார்தாரரின் மனைவி அழைத்ததால் வந்ததாக எனது விசாரணையில் கூறினார்கள். புகார்தாரர் மற்றும் அவரது மனைவி எனது விசாரணையின்போதும், புகாரிலும் எதிரிகள் புகார்தாரரை பார்த்து " செத்தால் சாகுடா என்று கூறியதாக" என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சொன்ன நாள் தேதி நேரத்தில் சொன்ன முறையில் புகார் மனு பெறப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றால்

சரியல்ல.

11. குற்ற எண். 183/2023 வழக்கில் இவ்வழக்கின் புகார்தாரர் தனக்கு தானே தீ வைத்து கொண்டதாக விசாரணையின் அடிப்படையில் முடிவு செய்து மேல் நடவடிக்கையானது நிறுத்தப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால் இவ்வழக்கு சம்பவம் உண்மையாக இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 245/2023** |
| Deposition of witness for | :: | **PW. 5** |
| Name | :: | **உமாமாலினி (சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 3 எதிரிகள் ஆஜர். 2, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**03.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.07.2023 ம்தேதி நான் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நான் பணிபுரிந்தபோது மாலை 07.00 மணியளவில் பாளையம்பட்டி ராஜீவ் நகரை சேர்ந்த முத்தையா மகன் ராஜாமணி மற்றும் அவருடைய மகனான சரவணக்குமார் ஆகியோர்கள் நிலையம் ஆஜராகி அவர்கள் வீட்டின் கழிவு நீரை வெளியேற்றுவதற்காக உறைகுழி தோண்ட போவதாகவும், ஆனால் அவர்கள் வீட்டிற்கு அருகில் உள்ள அழகர்சாமி என்பவர் உறைகுழியை தோண்ட விடாமல் பிரச்சனை செய்வதாகவும் என்னிடம் கூறினார்கள்.அப்போது அவர்கள் இருவரிடமும் இடப்பிரச்சனை என்பதால் அவர்களை பஞ்சாயத்து அலுவலகத்தை அணுகும்படி நான் அறிவுரை கூறினேன். சற்று நேரத்திலேயே அழகர்சாமியும், அவருடன் சேர்ந்து இரண்டு நபர்களும் காவல் நிலையத்திற்கு வந்தார்கள். அப்போது இருதரப்பினர்களுக்கும் அறிவுரை கூறி இடம் சம்மந்தமான பிரச்சனை

என்பதால் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று பிரச்சனையை தீர்த்து கொள்ளும்படி தகவல் தெரிவித்து அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் இருதரப்பினர்களிடமும் பேசியபோது என்ன காரணத்திற்காக உறைகுழி தோண்டக்கூடாது என்று அழகர்சாமி என்னிடம் கூறினாரா என்றால் பொதுபாதை என்பதால் தோண்டக்கூடாது என்று கூறினார்.

**மறுவிசாரணை**

**இல்லை**